IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF,
THIRUMANGALAM.
O.S.No.65/2020
DEPOSITION OF WITNESS

<u>பி.வா.சா. 2சாட்சி லெட்சுமி க.பெ.சூரப்ப கவுண்டர்</u>

**Solemnly affirmed and sworn by Thiru.E.Manikandan, B.A.,B.L, Principal District Munsif on 03.07.2026 in accordance with the provisions of Act XX141.**

<u>வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u> :

1. நான் எதுவரை படித்துள்ளேன் என்றால் 5ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூத்தை பற்றி தெரியுமா என்றால் தெரியாது. எனக்கு சொந்த ஊர் எது என்றால் பழங்காநத்தம் ஆகும். குருசாமிகோணார் எனது மாமனார் ஆகும். சுந்தர்ராஜன் என்பவர் குருசாமிகோணாரின் மகன் ஆவார் என்றால் சரிதான். வாதிகளை பள்ளியில் சேர்க்கும்போது அவர்கள் பற்றி விபரத்தை பள்ளிக்கூட அதிகாரிகளுக்கு நான்தான் சொன்னேன் என்றால் சரிதான்.

2. வாதிகள் குணசேகரன், முத்துப்பாண்டி ஆகியோரின் முகவரி மற்றும் தகப்பனார் பெயரின் விபரத்தை நான்தான் தெரிவித்தேன் என்றால் சரிதான். பழங்காநத்தத்தில் உள்ள வீட்டிற்கு எந்த வருடம் வந்தேன் என்றால் தெரியாது. என் மகன்கள் பிறந்த இடம் கதவு எண்.130, தெற்கு தெரு, பழங்காநத்தம் என்ற முகவரியில்தான் பிறந்தார்கள் என்றால் சரிதான். மேற்படி வீடு குருசாமிகோணாருக்கு பூர்வீக பாத்தியமானது என்றால் சரிதான். எனது நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள சூரப்பகவுண்டர் எப்போது இறந்தார் என்றால் 20 வருடத்திற்கு முன்பு இறந்துவிட்டார்.

3. வா.சா.ஆ. 10 ல் உள்ள புகைப்படத்தில் காணப்படுபவர் மாயகுரு என்றால் சரிதான். வா.சா.ஆ. 10 எனது குடும்ப அட்டை என்றால் சரிதான். வா.சா.ஆ. 10 ல் எனது குடும்ப உறுப்பினர்கள் 4 பேர் பெயர் உள்ளது என்றால் சரிதான். சூரப்பகவுண்டருக்கும் எனக்கும் திருமணம் நடைபெற்றதற்கு ஏதாவது ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. சூரப்பகவுண்டருக்கு சொந்த ஊர் எது என்றால் கீழக்கோட்டை ஆகும். அவருடன் பிறந்தவர்கள் யாரும் உள்ளார்களா என்றால் யாரும் இல்லை.

4. சூரப்பகவுண்டரின் முகவரி தெரியுமா என்றால் தெரியாது. சூரப்பகவுண்ருக்கும் எனக்கும் திருமணம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. வாதிகள் எனக்கும் மாயகுரு என்பவருக்கும்தான் பிறந்தவர்கள் என்றும் தற்போது மாயகுரு தூண்டுதலின் பேரில் வாதிகள் சூரப்பகவுண்ருக்கும் எனக்கும் பிறந்ததாக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதிகள் மாயகுருவுக்கு சொந்தமான வீட்டில்தான் பிறந்தார்கள் என்றால் குடியிருந்தோம். வாதிகள் மாயகுருவின் நேரடி வாரிசுகள் ஆவார்கள் என்றும் நான் வாதிகளுக்கு சொத்து கிடைக்ககூடாது என்பதற்காக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

5. குருசாமிகோணார், மாயகுரு ஆகியோர் அவர்களுக்கு பாத்தியப்பட்ட பூர்வீக சொத்துக்களை பொறுத்து பாகம் செய்து கொண்டார்கள் என்றால் தெரியாது. 1ம் வாதி தற்போது நான் குடியிருக்கும் வீட்டின் மாடியில்தான் குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் எனது சாட்சியம் ஏற்கத்தக்கது அல்ல என்றாலும் சரியல்ல.

(2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.)

**மறுவிசாரணை: இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை

தட்டச்சு செய்து அவருக்கு படித்துக்காட்டி

அவர் சரியென்று ஒப்புக்கொண்டு இதில்

கையொப்பமிட்டார்.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2026.07.03 12:35:47 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

திருமங்கலம்.